

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (13.6.2023) தலைமைச் செயலகத்தில், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை சார்பில் வனத்துறை களப்பணியாளர்களின் பயன்பாட்டிற்காக 2 கோடியே 42 லட்சம் ரூபாய் செலவிலான 200 மின்சார இருசக்கர வாகனங்கள், 4 கோடியே 63 லட்சம் ரூபாய் செலவிலான 50 பொலிரோ ஈப்புகள், வன உயிரின அவசர மீட்பு பணிகள் மற்றும் காயமுற்ற வன உயிரினங்களுக்கு அவசர சிகிச்சை அளித்திட 5 கோடியே 25 லட்சம் ரூபாய் செலவில் பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட 35 மீட்பு மற்றும் மறுவாழ்வு வாகனங்கள் (specially designed rescue and rehabilitation vehicles) ஆகியவற்றை கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், வனத்துறை அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன், தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி சுப்ரியா சாகு, முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (வனத்துறைத் தலைவர்) சுப்ரத் மஹாபத்ர, முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் தலைமை வன உயிரினக் காப்பாளர் ஸ்ரீனிவாஸ் ரா. ரெட்டி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# அமித்ஷா பயணத்தின் விளைவு?

ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித் ஷா அவர்கள், கடந்த ஞாயிற்றுக்கிழமை சென்னை வந்து தனது சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டுவிட்டுத் திரும்பிப் போய்விட்டார். அவருடைய இந்தப் பயணத்தினால் ஏற்பட்ட விளைவுகள் என்ன ?

**ஒரே கூட்டணியில் இருப்பதாகச் சொல்லப்படும் பா.ஜ.க.- அ.தி.மு.க. இடையிலான முட்டலும், மோதலும் உச்ச கட்டத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது.**

**ஜெயலலிதா, மோசமான ஊழல் முதல்வர்; ஊழல் வழக்கில் நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டவர்; அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில்தான், மோசமான நிர்வாகமும், லஞ்சமும் தலைவிரித்தாடியது - என்று ஒரு பேட்டியில் அண்ணாமலை கூறியிருக்கிறார்.**

**அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார், “அண்ணாமலைக்கு, பல விஷயங்களில் வாய், நாக்கு நீளம், வாய்ச் சவடால்; அவரிடம் நாவடக்கம் இல்லை; அவர் கட்டுச் சோற்றில் கட்டின பெருச்சாளி மாதிரி நொய் நொய்ங்கிறார்” - என்று கண்டித்திருக்கிறார்.**

**“ஜெயலலிதாவின் ஆட்சியை தரக் குறைவாக அண்ணாமலை விமர்சித்திருப்பது, கழுதைக்குத் தெரியுமா கற்பூர வாசனை என்ற பழமொழியைத்தான் நினைவு படுத்துகிறது” - என்று தாக்கி அறிக்கை வெளியிட்டுள்ளார் ஓ.பி.எஸ்.**

**“ஜெயக்குமார், நுனி மரக் கிளையில் அமர்ந்துகொண்டு, கிளையின் அடிப் பகுதியை வெட்டிக் கொண்டிருக்கின்றார். அண்ணாமலையை விமர்சித்தால், பாதிப்பு அ.தி.மு.க.வுக்குத்தான்” என்று தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார் பா.ஜ.க. மாநிலத் துணைத் தலைவர் கரு.நாகராஜன்.**

**இந்த மோதல்களுக்கிடையே, “உலகத்தையே விரல் நுனியில் எண்ணக்கூடிய எடப்பாடிக்குத்தான் பிரதமராகும் வாய்ப்பு உள்ளது” என்று அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் பொன்னையனும்;**

**“ இந்தியப் பிரதமராகப் பொறுப்பேற்கத் தகுதி வாய்ந்த ஒரே தலைவர் பழனிசாமிதான்” - என்று அ.தி.மு.க. எம்.பி. தம்பிதுரையும் ;**

கூறி, பா.ஜ.க. – அ.தி.மு.க. மோதலில் நிறைய நகைச்சுவையைக் கலந்திருக்கிறார்கள்.

# முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்!

முதல் பக்கத் தொடர்ச்சி

கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர் கெலவரப்பள்ளி அணையிலிருந்து சிப்காட் தொழிற்பூங்காக்கள் மற்றும் பிற தொழிற்சாலைகளுக்கு இரண்டு கட்டங்களாக 20 MLD கொள்ளளவு கொண்ட மூன்றாம் நிலை எதிர் சவ்வூடுபரவல் சுத்திகரிப்பு ஆலையை (TTRO Plant) 187.20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவுவதற்கான திட்டப் பணிக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்றையதினம் அடிக்கல் நாட்டினார். இத்திட்டத்திற்கான முதற்கட்டப் பணிகள் 15 மாதங்களில் நிறைவு பெறும்.

இத்திட்டத்தின் மூலம் 2092 ஏக்கரில் அமைந்துள்ள ஒசூர் சிப்காட் தொழிற்பூங்கா, 989 ஏக்கரில் அமைந்துள்ள சூளகிரி சிப்காட் தொழிற்பூங்கா மற்றும் ஒசூர் மண்டலத்தில் 1800 ஏக்கரில் அமையவுள்ள புதிய சிப்காட் தொழிற்பூங்காக்களில் உள்ள தொழிற்சாலைகளின் நீர் தேவை பூர்த்தி செய்யப்பட்டு, 800க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் பயன்பெறும். இதனால், இப்பகுதியில் நிலத்தடி நீரும், மேற்பரப்பு நீரும் பாதுகாக்கப்படும்.

மேலும், இதன் மூலம், இத்தொழிற் பூங்காக்களில் புதிய தொழிற்சாலைகள் அமைந்திட வாய்ப்பு ஏற்பட்டு, கூடுதலாக 6,000 கோடி ரூபாய் முதலீடு ஈர்க்கப்படுவதுடன், 10,000 நபர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைத்திடவும் வழிவகை ஏற்படும்.

சிப்காட் நிறுவனத்தின் பெருநிறுவன சமூக பொறுப்பு நிதியிலிருந்து திருவண்ணாமலை மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் உள்ள 537 பள்ளிகளுக்கு பலசெயல்பாட்டு அச்சுப்பொறிகளை (Multi Functional Printers) கொள்முதல் செய்வதற்காக பள்ளிக்கல்வித் துறைக்கு 50 இலட்சம் ரூபாய்க்கான காசோலையினை, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் இன்றையதினம் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ச. கிருஷ்ணன், தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் மேலாண்மை இயக்குனர் திருமதி எ.சுந்தரவல்லி, செயல் இயக்குநர் நிஷாந்த் கிருஷ்ணா ஆகியோர் கலந்து கொண்டனர்.

## இந்தி மொழிக்கு முன்னுரிமை!

# நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் நிறுவனம் மன்னிப்புக் கோரியது!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் கண்டனம் எதிரொலி!

மும்பை, ஜூன் 14 -

இந்தி மொழிக்கு முன்னுரிமை அளிக்கும் சுற்றறிக்கைக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கண்டனம் தெரிவித்திருந்த நிலையில், நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் நிறுவனம் மன்னிப்பு கோரியுள்ளது.

மும்பையை தலைமையிடமாக கொண்டு செயல்படும் பொதுத்துறை நிறுவனமான நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் நிறுவனத்தின் தலைவர் நீரஜ் கபூர் சார்பில் ஊழியர்களுக்கு சுற்றறிக்கை ஒன்று அனுப்பப்பட்டது. அலுவலக நூலகங்களில் இந்தி மொழி தொடர்பான புத்தகங்களை மட்டுமே வைக்கவேண்டும், அலுவலகங்களில் இந்தி மொழி நாளிதழ்களை மட்டுமே வைக்க வேண்டும், இந்தி மொழி பேசி வேலை பார்ப்பவர்களை ஊக்குவிக்கும் வகையில் அவர்களுக்கு ஊக்கத்தொகை வழங்கவேண்டும் என அந்த சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் நிறுவனத்தின் இந்த சுற்றறிக்கைக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடும் கண்டனம் தெரிவித்திருந்தார். இந்தி பேசாத மக்களின் உரிமைகள் பறிக்கப்படுவதை சகித்துக்கொண்டிருக்கும் காலம் மலையேறிவிட்டதாகவும், இந்தி திணிப்பை தி.மு.க. முழுமூச்சோடு எதிர்க்கும் என்றும் முதலமைச்சர் உறுதிபட தெரிவித்திருந்தார். நியூஇந்தியா அஷ்யூரன்ஸ் நிறுவன தலைவர் நீரஜ் கபூர் இந்த சுற்றறிக்கையை உடனடியாக திரும்பப் பெறுவதுடன் மன்னிப்பு கேட்க வேண்டும் என்றும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியிருந்தார்.

இந்நிலையில், இந்தி திணிப்பை ஊக்குவிக்கும் வகையில் அனுப்பப்பட்ட சுற்றறிக்கையை திரும்பப் பெறுவதுடன், மன்னிப்பு கோருவதாகவும் நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது. மேலும், மாநில மொழிகள் மற்றும் கலாச்சாரத்தை மதிப்பதாகவும் நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் நிறுவனம் வெளியிட்டுள்ள அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு மாநில தலைமை தகவல் ஆணையராக

# ஓய்வு பெற்ற ஐ.பி.எஸ். அதிகாரி ஷகீல் அக்தர் நியமனம்!

## தமிழ்நாடு அரசு உத்தரவு!

சென்னை, ஜூன் 14-

தமிழ்நாடு மாநில தலைமை தகவல் ஆணையராக ஓய்வுபெற்ற ஐ.பி.எஸ். அதிகாரி ஷகீல் அக்தரை நியமித்து தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது.

தமிழ்நாடு அரசின் பல்வேறு துறைகள், அலுவலகங்கள் மற்றும் திட்டங்கள் சார்ந்து பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் எழுப்பப்படும் கேள்விகளுக்கு பதில் அளிப்பது தமிழ்நாடு தகவல் ஆணையத்தின் பணியாகும். அதிகாரமிக்க தலைமை தகவல் ஆணையர் மற்றும் நான்கு ஆணையர்களின் பதவிக்காலம் கடந்த நவம்பர் மாதம் நிறைவடைந்தது. இதனைத் தொடர்ந்து புதிய தலைமை தகவல் ஆணையர் மற்றும் ஆணையர்கள் பதவிக்கு தகுதியானவர்களை தேர்வு செய்வதற்கான தேடுதல்குழு ஓய்வு பெற்ற நீதிபதி அக்பர் அலி தலைமையில் அமைக்கப்பட்டது.

இக்குழு அளித்த அறிக்கையின் அடிப்படையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் இரண்டு முறை புதிய தலைமை தகவல் ஆணையரை தேர்வு செய்வது குறித்து ஆலோசனை நடைபெற்றது. இதில், ஓய்வு பெற்ற சி.பி.சி.ஐ.டி. டி.ஜி.பி. ஷகீல் அக்தரை தேர்வு செய்து பரிந்துரை கடிதம் ஆளுநருக்கு அனுப்பப்பட்டது. அந்த பரிந்துரையை ஏற்று தலைமை தகவல் ஆணையராக ஷகில் அக்தரை நியமித்து ஆளுநர் உத்தரவிட்டுள்ளார். ஓய்வு பெற்ற ஏ.டி.ஜி.பி. தாமரை கண்ணன், ஆர்.பிரியா குமார், டாக்டர் கே.திருமலைமுத்து, டாக்டர் எம். செல்வராஜ் ஆகிய 4 பேரும் தகவல் ஆணையர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

## ஓராயிரம் அமித்ஷாக்கள் வந்தாலும்

# தமிழ்நாட்டு மக்களை அசைக்க முடியாது!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு பேட்டி!



சென்னை, ஜூன் 14

சென்னை திரு.வி.க நகர் மண்டலத்திற்கு உட்பட்ட ஸ்டீபன் சாலை மேம்பால பணிகளை அமைச்சர் பி.கே. சேகர்பாபு நேரில் ஆய்வு செய்தார். இந்நிகழ்வில் சென்னை மேயர் பிரியா, மாநகராட்சி ஆணையர் ராதாகிருஷ்ணன், திரு.வி.க.நகர் எம்.எல்.ஏ. தாயகம் கவி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து பேட்டி அளித்த அமைச்சர் பி.கே. சேகர்பாபு கூறியதாவது:

கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தை பொறுத்த வரை மழைக்கால தண்ணீர் பிரச்சினையை தீர்ப்பதற்கான வசதி, அடிப்படை வசதிகள் பொழுதுபோக்கு வசதிகள் என்று எதையும் திட்டமிடாமல் கடந்த ஆட்சி காலத்தில் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. தி.மு.க. ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு அந்தப் பணிகளில் எல்லாம் சுவனம் செலுத்தி வருகிறோம்.

போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்த தேவையான நடவடிக்கைகள், பேருந்து நிலையத்தைச் சுற்றி சாலை வசதிகள், மழைநீர் தேங்காமல் இருக்க கால்வாய் வசதிகள், பொழுதுபோக்கிற்காக பூங்கா வசதிகள், மருத்துவ மையம், காவல் மையம், ஆம்னி பேருந்து நிலையத்திற்கு தனியாக இடம் தேர்வு செய்து 5 ஏக்கர் பரப்பளவில் ரூ.30 கோடி செலவில் ஆம்னி பேருந்து நிலையத்திற்கு இடம் என பணிகள் நடைபெற்று வருவதால் கிளாம்பாக்கம் பேருந்து நிலையம் பணிகளை எவ்வளவு விரைவாக முடிக்க முடியுமோ அவ்வளவு விரைவாக முடித்து கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தை விரைவில் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருவோம்.

தமிழ்நாட்டில் முதலில் பா.ஜ.க. 25 தொகுதிகளில் போட்டியிடட்டும். அப்படி போட்டியிட்டாலும் தேர்தலுக்கான முன்வைப்பு தொகையை தக்க வைக்கவே பா.ஜ.க.வினர் போராடுவார்கள்.

ஒரு அமித்ஷா அல்ல; ஓராயிரம் அமித்ஷா வந்தாலும் தமிழ்நாடு முதல்வர் செல்வாக்கையும், முதல்வர் மீது தமிழக மக்கள் வைத்துள்ள நம்பிக்கையையும், தமிழக மக்களையும் அசைத்துப் பார்க்க முடியாது.

இரண்டு தமிழர்கள் பிரதமராவதை தி.மு.க. தடுத்ததாக அமித்ஷா கூறுகிறார். தமிழக முதல்வரும் தமிழர் தானே.

இவ்வாறு அமைச்சர் பி.கே. சேகர்பாபு கூறினார்.



தருமபுரி மாவட்டம் அதியமான்கோட்டை நியாய விலைக்கடையில் அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு இரண்டு கிலோ கேழ்வரகு (ராகி) விநியோகத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கி.சாந்தி முன்னிலையில், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் நேற்று முன்தினம் (12.06.2023) தொடங்கி வைத்தார்கள். உடன் உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை ஆணையாளர் வி.ராஜாராம், சென்னை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம் நிர்வாக இயக்குநர் மரு. எஸ்.பிரபாகர், தருமபுரி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.பி.வெங்கடேஷ்வரன், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.சு.அனிதா, தருமபுரி நகர்மன்றத் தலைவர் திருமதி. மா. லட்சுமி, முன்னாள் அமைச்சர் முனைவர்.பி.பழனியப்பன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் தடங்கம்.பெ.சுப்பிரமணி, மனோகரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஜி.சேகர், நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் திருமதி.பெ.மகேஸ்வரி உட்பட தொடர்புடைய அலுவலர்கள், கூட்டுறவு சங்க பிரதிநிதிகள், மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளனர்.



முதலமைச்சரின் கிராம சாலைகள் (2023–2024) ஆண்டுக்கான மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் திட்டக்குடி சட்டமன்றத் தொகுதி பொயணப்பாடி முதல் கஞ்சிராங்குளம் வரை ரூ.77 லட்சம் மதிப்பீட்டில் 0/01/425 மேம்பாடு செய்தல் பணியை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் தொடங்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சியர் அருண் தம்புராஜ், மாவட்ட கூடுதல் ஆட்சியர் ஆகியோர் உள்ளனர்.